**<u>09.06.2026</u>**

STC.No. 349/2017 திருநாவுக்கரசு த/பெ. அண்ணாமலை DW1

**<u>குறுக்கு விசாரணை (புகார்தாரர் தரப்பில்)</u>**

நான் எதிரியின் வீட்டிற்கு அருகில் 2 வீடுகள் தள்ளி குடியிருந்து வருகிறேன். புகார்தாரரை எனக்கு எப்படி தெரியும் என்றால் எதிரியின் வீட்டிற்கு வருவதன் மூலம் தெரியும். புகார்தாரர் எதற்காக எதிரியின் வீட்டிற்கு வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதற்காக புகார்தாரர் எதிரியின் வீட்டிற்கு வந்தார் என்றால் வேலை வாங்கி தருவதாக புகார்தாரரும், எதிரியும் சென்னையில் உள்ள வரதராஜன் என்பவரிடம் பணம் கொடுத்தது தொடர்பாக புகார்தாரரும், எதிரியும் சத்தம் போட்டுக் கொள்வார்கள். சென்னையில் உள்ள வரதராஜன் என்பவரிடம் புகார்தாரர் பணம் கொடுத்தாரா அல்லது எதிரி பணம் கொடுத்தாரா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. 25.01.2016 அன்று புகார்தாரர் எதிரியின் வீட்டிற்கு வந்து பணம் கேட்டு பிரச்சனை செய்தார் என முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் புகார்தாரர் அன்றைய தினம் மட்டும் தான் எதிரியின் வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்தாரா அல்லது அதற்கு முன்னரும் பிரச்சனை செய்தாரா என்றால் அதற்கு முன்னரும் பிரச்சனை செய்தார். புகார்தாரருக்கும், எதிரிக்கும் இடையே உள்ள பிரச்சனை என்னை தவிர வேறு யாருக்கு தெரியும் என்றால் புஷ்பா, சித்திரவேல், நீதிபதி ஆகியோருக்கு தெரியும். மேற்சொன்ன நபர்கள் அனைவரும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன நபர்களையும் அழைத்து விசாரணை செய்தால் எதிரிக்கும், புகார்தாரருக்கும் இடையே உள்ள பிரச்சனை குறித்து தெரியும் என்றால்

சரிதான். பிரச்சனை சம்மந்தமாக புகார்தாரரோ அல்லது எதிரியோ காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. எதிரி புகார்தாரருக்கு காசோலை கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. காசோலை புத்தகம் தொலைந்து போன விவரம் தான் எனக்கு தெரியும். காசோலை புத்தகம் காணாமல் போனதாக சொல்லப்படும் நாளன்று நான் எதிரியுடன் இருந்தேனா அல்லது வீட்டில் இருந்தேனா என்றால் வீட்டில் இருந்தேன். எங்கு வைத்து காசோலை புத்தகம் காணாமல் போனது என்றால் இலால்குடி காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள டீக்கடையில் வைத்து காசோலை புத்தகம் காணாமல் போனது. காணாமல் போன காசோலை புத்தகத்தில் எத்தனை காசோலை இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. காசோலை புத்தகம், பட்டா, சிட்டா காணாமல் போனது தொடர்பாக புகார் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. அந்த புகாருக்கு மனு ரசீது வழங்கப்பட்டதா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. காசோலை புத்தகம் காணாமல் போனது தொடர்பாக வங்கியில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. காசோலை புத்தகம் காணாமல் போனது தொடர்பாக வங்கிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. காசோலை புத்தகம் காணாமல் போனது தொடர்பாக காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் மேல் எடுத்த நடவடிக்கை குறித்து எனக்கு தெரியுமா என்றால் எதிரியிடம் கேட்டேன், கண்டுபிடித்து தருவாக காவல் நிலையத்தில் சொன்னார்கள் என என்னிடம் சொன்னார். இந்த வழக்கு தொடர்பாக எதிரிக்கு புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு குறித்து எதிரி என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். வழக்கறிஞர் அறிவிப்பு பெற்ற பின்னர் எதிரி புகார்தாரர் மீது காவல் நிலையத்தில் புகார்

கொடுத்தாரா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் காசோலை புத்தகம், பட்டா, சிட்டா காணாமல் போகவில்லை என்றாலும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை என்றாலும் எதிரி எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.09 17:47:40 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி